**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS,
# MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 502 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 5** |
| **Name** | : | **திருமதி. ஆர்த்தி** |
| **Husband's Name** | : | கார்த்திக்ராஜா |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **10.02.2025**

எதிரிகள் 1,6 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. other accused appearance dispensed with.

**முதல் விசாரணை :**

நான் திருப்புவனம் தாலுகா, புல்வாய்கரையில் குடியிருந்து வருகிறேன். கார்த்திக்ராஜா எனது கணவர். நான் 8 ம் வகுப்பு வரை படித்து, பாதியிலேயே நிறுத்திவிட்டு வீட்டில் இருந்தேன். கடந்த 2016 ம் ஆண்டு ஒரு பையனை காதலித்தேன். எனது அப்பா ஒத்துக்கல. அதன்பின்னர், என் தாய்மாமாவிற்கு என்னை கல்யாணம் செய்து கொடுத்துவிட்டார்கள். அதன் பிறகு 3 மாதம் கழித்து, நான் கன்சீவாக இருந்தேன். வயிறு வலி ஆரம்பித்தது. அதனால் கொந்தகை ஆஸ்பத்திரிக்குப் போனோம். அங்கு கன்சீவாக இருக்கிறேன் என்று சொன்னார்கள். பின்னர் ஸ்கேன் எடுத்துப் பார்த்தார்கள். 8 மாதம் கன்சீவ் என்று சொல்லிவிட்டார்கள். அதன் பிறகு என் அம்மா அப்பா வீட்டிற்கு போய்விட்டேன். அதன்பிறகு ஒரு நாள் இரவு எனக்கு வயிற்று வலி வந்தது. ஆஸ்பத்திரிக்கு போனோம். என் அம்மா, அப்பா என்னைக் கூட்டிப்

போனார்கள். அதற்கு பிறகு, மறுநாள் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு பிறகு குழந்தையுடன் discharge ஆகி வீட்டிற்கு வந்துவிட்டேன். அதற்கு பிறகு தூரத்து சொந்தக்காரர் ஒருத்தர், குழந்தையை வீட்டிற்கு எடுத்துப போனால், தப்பாக பேசுவார்கள் என்று சொன்னார். அந்த தூரத்து சொந்தக்காரரிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு வீட்டிற்குப் போய்விட்டேன். அவ்வளவு தான் தெரியும். போலிசார் என்னை விசாரித்தார்கள். .

**நீதிமன்ற கேள்வி** : எந்த ஆஸ்பத்திரியில் குழந்தை பிறந்தது ?
**பதில்** : என் பெற்றோர் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். எந்த ஆஸ்பத்திரி என்று பெயர் தெரியாது.,

**நீதிமன்ற கேள்வி** : தூரத்து சொந்தக்காரர் ஆனா பெண்ணா?
**பதில்** : தெரியாது.

**நீதிமன்ற கேள்வி** : நான் மருத்துவமனையில் இருந்து discharge ஆன போது யார் கூட்டிச் சென்றார்கள்?
**பதில்** : என் அம்மா அப்பா கூட்டிச் சென்றார்கள்.

**நீதிமன்ற கேள்வி** : நான் குழந்தையை ஒப்படைத்த நபரின் பெயர், ஊர் என்ன?
**பதில்** : தற்போது ஞாபகம் இல்லை.

**நீதிமன்ற கேள்வி** : நான் குழந்தையை ஒப்படைத்த நபர் எப்படி எனக்கு தூரத்து சொந்தம் என்று எனக்குத் தெரியும்?
**பதில்** : என் அம்மா, அப்பா தூரத்து சொந்தம் என்று சொன்னார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் கு.வி.</u>**

போலிசார் விசாரணையின் போது, 11.03.2016 ம் தேதி கார்த்திக்ராஜாவுடன் எனக்குத் திருமணம் ஆனது என்றும், அப்போது எனது

வீட்டிற்கு அருகில் உள்ள கருப்பையா என்பவரது மகன் கண்ணன் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு, இருவரும் காதலித்து வந்தோம் என்றும், இருவரும் உடலுறவு வைத்துக் கொண்டோம் என்றும், எனது வீட்டில் என் தாய்மாமா உறவான கார்த்திக்ராஜாவுடன் திருமண பேச்சு நடைபெற்ற போது, என் காதல் விஷயத்தை சொல்லவில்லை என்றும் சொன்னால் பிரச்சனை ஆகிவிடும் என்று நினைத்து, பயந்து, என் தாய்மாமாவை திருமணம் செய்து கொண்டேன் என்றும் என் மாமாவுடன் நல்லமுறையில் குடும்பம் நடத்திவந்தேன் என்றும் எனக்கு மாதவிலக்கு முன்,பின் வரும் என்றும் அதனால் எனக்கு நான் கர்ப்பமானது எதுவும் தெரியவில்லை என்றும் தொடர்ந்து மாதவிலக்கு வராததால், எனக்கு சந்தேகமாக இருந்தது என்றும் என் கணவர் என்ன என்று விசாரித்தபோது, வயிற்றில் ஏதோ பிரச்சனை, பார்க்கவேண்டும் என்று சமாளித்து விட்டதாகவும், அதன்பின், கொந்தகை அரசு துணை சுகாதார நிலையத்தில் சென்று பார்த்தபோது, நான் கர்ப்பமாக இருந்ததாக கூறியதாகவும், ஸ்கேன் எடுத்து வரச் சொன்னதாகவும், நானும் என் கணவரும் மதுரை சுகம் ஸ்கேன் சென்டரில் ஸ்கேன் செய்ததாகவும், அப்போது கடைசியாக மாதவிலக்கு தேதி கேட்டபோது, திருமணத்திற்கு முந்தைய மாத தேதியைச் சொன்னதாகவும், ஸ்கேன் ரிப்போட்டில் 8 மாதம் என்று சொன்னவுடன் என் கணவர் என்னை நேரடியாக என் அம்மா வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார் என்றும் 07.06.2016ம் தேதி தான் ஸ்கேன் செய்தேன் என்றும் அதில் இருந்து என் அம்மா வீட்டில் இருந்ததாகவும், என் அம்மா கேட்டபோது, என் அம்மாவிடமும், என் கணவரிடமும், என் தவறை ஒப்புக் கொண்டதாகவும், அவர் என் தவறை பொறுத்துக் கொண்டார் என்றும், குழந்தைன்னு பிறந்தா, ஊர்க்காரங்களுக்குத் தெரிந்து, அசிங்கமாகிவிடும், அவமானப்படனும் என்றும், அதனால் இந்த குழந்தை வேண்டாம்னு முடிவெடுத்ததாகவும், எங்க ஊரில் 2,3 டாக்டர்களிடம் விசாரித்த போது, கருவைக் கலைக்க முடியாது என்று சொன்னதாகவும், அதனால் என்ன பண்ணுவது என்று தெரியாமல் மதுரை அண்ணாநகரில் இருக்கும் எனது

பெரியம்மா வள்ளியிடம் சொன்னதாகவும், எனது பெரியம்மா 09.06.2016 ம் தேதி மதுரைக்கு அழைத்துக் கொண்டதாகவும், 2,3 நாட்கள் சாப்பிடாமல் அழுது கொண்டே இருந்ததால், வயிறு வலி வந்துவிட்டதாகவும், 09.06.2016 ம் தேதி இரவு எனது பெரியம்மா வள்ளி என்னை முடக்கத்தானில் உள்ள SS ஆஸ்பிட்டலுக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்த டாக்டர் சாந்தி என்பவர் என்னை செக்கப் செய்து, வலி எப்படி வந்தது என்று விசாரித்ததாகவும், நான் எனக்கு குழந்தை வேண்டாம்னும், கலைக்கத்தான் வந்தேன் என்று சொன்னதாகவும், உடனே டாக்டர், என் அம்மா மற்றும் என் வீட்டுக்காரரை அழைத்துப் பேசியதாகவும், அப்போது, என் அம்மாவும் வீட்டுக்காரரும், நடந்த விஷயத்தைச் சொல்லி, குழந்தை பிறந்து, வீட்டிற்குத் தூக்கிச் சென்றால் ஊருக்குள் தலை காட்ட முடியாது என்றும், குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்வோம் என்று கூறி அழுததாகவும், அப்போது டாக்டர் குழந்தையைக் கலைக்க முடியாது, குழந்தையைக் கலைத்தால் பெரிய உயிருக்கு ஆபத்தாகிவிடும், பின்னர் என் வீட்டுக்காரர், என் அம்மா, அப்பா ஆகியோரிடம் கையெழுத்து வாங்கியதாகவும், அதன் பின்னர் ஊசி போட்டதாகவும், மறுநாள் 10.06.2016 ம் தேதி காலையில் எனக்கு ஆபரேசன் நடந்ததாகவும், மயக்கம் தெளிந்து பார்த்தபோது, கையில் ஆண் குழந்தையைக் கொடுத்ததாகவும், அதை நான் வாங்கவில்லை என்றும் ஆஸ்பத்திரியில் இருந்த 2 நாட்களும் நான் குழந்தையைப் பார்க்கல, எனக்கு குழந்தை வேணாம்னு நினைச்சதால, அதை நான் பெருசா நினைச்சுக்கல என்றும், குழந்தையை யாரும் கேட்டா கொடுத்துடுங்க என்றும் 12.06.2016 ம் தேதி காலை நான் discharge ஆகி வந்துவிட்டேன் என்றும் என் அம்மா வீட்டில் தான் இருந்தேன் என்றும், பின்னர், எனக்குப் பிறந்த ஆண் குழந்தையை SS ஆஸ்பிடல் சாந்தி வேறு யாருக்கோ விற்க ஏற்பாடு செய்துள்ளார் என்பது எனக்குத் தெரியவந்தது என்றும், அதன்பின்னர் என் குழந்தையைப் பார்க்கவோ, பேசவோ விரும்பவோ இல்லை என்று

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது, டாக்டர் மற்றும் அவரது உறவினர்களைக் காப்பாற்றும் நோக்கில், உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை